நீங்கள் தேவனுடைய உருக்கமான அன்பை உணர்ந்தீர்களா மேலும் அவரிடம் இரட்சிப்பிற்காக வருவீர்களா? நீங்கள்?
நீங்கள் எப்பொழுதாவது இயேசு சிலுவையில் பட்ட பாடுகளை சிந்தித்திருக்கிறீர்களா? “அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்” (எபிரேயர் 12:2)

“கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைப் பண்ணப்படும். ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்”. (ரோமர்10:9,10,13).

HopeTractMinistry
of Bethel Baptist Church
P.O. BOX 1115 ● YORK, SC 29745 ● 803-684-1535
WWW.HOPETRACTS.ORG
The Love Of God (Tamil) Tract 542



# இயேசுவின் அன்பு

"ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" (யோவான் 15:13). "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்" (ரோமா 5:8)

"அநேக குற்றவாளிகள் ரோம் சிலுவைகளில் தண்டிக்கப்பட்டார்கள் ஆனால் ஒரே ஒரு மனிதன் மற்றவர்களுடைய குற்றங்களுக்காய் / பாவங்களுக்காய் சிலுவையில் மரணமடைய வந்தார். இது தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து. கிறிஸ்து அவருடைய நண்பர்களுக்காக மட்டுமல்லாது அவருடைய விரோதிகளுக்கும் அவருடைய ஜீவனை தர பூலோகத்திற்கு வந்தார். உலகம் அதினுடைய பிரச்சினைகளுக்கான பதிலை / விடையை தேடிக்கொண்டிருக்கிறது. ஆனால் அதற்கான பதில் ஏற்கனவே கொடுக்கப்பட்டுவிட்டது.

தேவனிடமிருந்து வந்த இந்த அன்பு, இயேசுவை இரட்சகராக நம்பின, எண்ணமுடியாத ஆயிரக்கணக்கான மக்களால் அனுபவிக்கப்பட்டு நிரூபணமானது. சமாதானம் என்பது மருத்துவர்களின் ஆலோசனை அல்லது ஏதாவது உயர்ந்த குறிக்கோளை அடைவதில் இல்லை, ஆனால் இயேசு கிறிஸ்துவில் மட்டுமே உள்ளது. தேவன் தீர்க்கதரிசனமாக அவருடைய குமாரன் வந்து அவருடைய ஜீவனை உங்களுக்காக கல்வாரியின் கோர சிலுவையில் தருவார் என்பதைக் கூறினார். அங்கே ஒரு பாவமும் இல்லாதவர் பாவிகளுக்காக மரித்தார்.

தேவன் அன்பின் உறைவிடமாகவே இருக்கிறார். "தேவன் அன்பாகவே இருக்கிறார்"(I யோவான் 4:8b). அன்பானது உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவனிடம் இருந்தது அது அவருடைய குமாரன் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. தேவனுடைய குமாரனை மனிதகுலத்திற்காக மரிக்க அனுமதித்ததன் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. அநேகர் தேவனை வெறுத்து, நிந்தித்து, அசட்டைப் பண்ணினார்கள். ஆனால் தேவன் அவர்களை நேசிக்கிறார்.

தேவன் எல்லா போதைக்கு அடிமையானவர்களையும், விபச்சாரிகள், குடிகாரர்கள் மற்றும் விலைமாதுக்கள் எல்லோரையும் நேசிக்கின்றார். அநேகர் தேவனை அசட்டைப்பண்ணி கறையில்லாத தேவனின் மகிமையை கறையுள்ள மனிதனால் செய்யப்பட்ட உருவமாக மாற்றினார்கள். ஆனாலும் தேவன் அவர்களை நேசிக்கிறார் மற்றும் அவர் உலகத்தை நேசிப்பதையும் நிரூபித்தார். அவர் திருச்சபைக்கு பின்வருமாறு கட்டளை யிட்டார். "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற்கு 16:15).

ஒரு நிமிடம் (என்னுடன்) சிந்தியுங்கள். "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்". (யோவான் 3:16). நமக்கு வெவ்வேறு நாடுகளுக்கிடையே, வெவ்வேறு ஜாதிகளுக்கிடையே மற்றும் வெவ்வேறு கலாச்சாரங்களுக்கிடையே பல பிரச்சினைகள் உள்ளது, ஆனால் இயேசு ஒருவரே நாம் எல்லோரும் ஒன்றாக வருவதற்குரிய பொதுவானவர். ஒரு ஜாதியார் மற்ற ஜாதியாரை நேசிக்க வேண்டும் என்பதை ஒரு சட்டத்தாலேயும் நடைமுறை படுத்த முடியாது. ஆனால் தேவனின் அன்பு உங்கள் உள்ளத்தில் கிரியை செய்து எல்லாரையும் நேசிக்கும் படி செய்யும். கருப்பு, வெள்ளை, சிவப்பு அல்லது மஞ்சள்.... எதுவானாலும் அவனுடைய பார்வைக்கு விலையேறப்பெற்றது. "நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால்..." (ரோமர் 5:5b).

தனிப்பட்ட ஒவ்வொருவனையும் தேவன் நேசிக்கிறார். ரோமர் 5:6-8 ல் தேவன் பெலனற்றவர்கள், நீதியுள்ளவர்கள், நல்லவர்கள் மற்றும் பாவிகளையும் நேசிக்கிறார் என்பதை வெளிப்படுத்துகிறது. கிறிஸ்து எல்லா மனித குலத்திற்காகவும் மரித்ததினால் நாம் ஒவ்வொருவரும் அவரை நமது இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டும்.